பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 12 வியாழக்கிழமை 29.10.2020 கதிர் 224

## 4,142 பேர் மீண்டனர்!

கொழும்பு, ஒக்.29

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சைப்பெற்று வருபவர்களில் மேலும் 67 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 4,142 ஆக அதிகரித்துள் ளது.

2

# கொரோனாத் தொற்றை அடுத்து கரவெட்டி இராஜகிராமம் முடக்கம்

## பல குடும்பங்கள் கட்டாயத் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29

**யாழ். வடமராட்சி, கரவெட்டி பிரதேசத்துக்குட்பட்ட இராஜகிராமத்தில் உள்ள பல குடும்பங்கள் சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.**

**வடமராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்ட மூவரில் ஒருவர் இராஜகிராமத்தைச் சேர்ந்தவர் என்பதால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

2

## யாழ். மாநகர சபை அமர்வில் மணிவண்ணன் பங்கேற்றார்!

### அவரது கட்சியிலிருந்து ஆட்சேபம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.29

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவான உறுப்பி னர் வி.மணிவண்ணன் சபை அமர்விற்கு இன்று பிரசன்னம் தந்தமை தொடர்பில் அவரது அணியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரே கேள்வி எழுப்பினார்.

2

## பலாலி வடக்கில் அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொண்ட கொரோனா நோயாளி

### பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி, பொலிகண்டி யைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று கொரோனாத் தொற்றுக்கு உள் ளாகியுள்ளமை உறுதிப்படுத் தப்பட்ட நிலையில் அவர் கலந்து கொண்ட அந்தியேட்டி நிகழ்வில் பங்குகொண்டவர்களைத்

2

## வடமராட்சியைச் சேர்ந்த 3 கொரோனா நோயாளிகள் வீடுகளிலேயே தங்கவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட மூவரும் அவர்களின் வீடுகளிலேயே

2

## ஒத்திவைக்கப்படாது நாடாளுமன்ற அமர்வு

### செவ்வாய் கூடுகின்றது சபை

நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது என நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் அறிவித் துள்ளது.

அதற்கமைய அன்று காலை 10 மணி முதல் பிற் பகல் ஒரு மணி வரை நாடாளுமன்ற அமர்வு இடம் பெறவுள்ளது.

2

## மாநகரசபையின்சபைகூட்டமைப்புஉறுப்பினர்கள் சுமந்திரன்எம்.பியுடன்விரிவானகலந்துரையாடல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மற் றும் சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

2

## பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்கள் பழுது!

### சீரமைக்க சீன நிபுணரை அழைக்கிறது கோட்டா அரசு



கொழும்பு, ஒக்.29

நாட்டின் பெரும் பாலான பி.சி.ஆர் பரிசோதனைகளுக் குப் பயன்படுத்தப் பட்ட இயந்திரங்கள் செயல்படவில்லை என்று இராணுவத் தளபதி, லெப்.ஜென ரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2

## மினுவாங்கொட, பேலியாகொடவில் இதுவரை 5,600 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஒக். 29

மினுவாங்கொட மற்றும் பேலியாகொட மீன் சந்தை கொத்தணிகளில் இதுவரை 5 ஆயிரத்து 600 பேருக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்றுறுதியாகி யுள்ளது.

அத்துடன் மினுவாங் கொடை பிரண்டிக்ஸ் கொரோனா கொத்தணி குறித்து விசாரணை நடத்து வதற்காக, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினால் விசேட குழு ஒன்று நியமிக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி காவல்துறை மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட பிரண் டிக்ஸ் கொத்தணியில்

2

## எதிர்ப்புகளை அடுத்து பின்வாங்கினார் மனோ

கொழும்பு, ஒக் 29

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தி லிருந்து தமது கையெ ழுத்தை வாபஸ் பெறு வதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணே சன் அறிவித் துள்ளார்.



கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர

2

## 20 ஆவது திருத்தச் சட்டம் இன்று முதல் நடைமுறை

கொழும்பு, ஒக் 29

ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் இன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயம் அறி வித்துள்ளார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன இன்று கையொப்பமிட்ட நிலை யில் இந்த அறிவிப்பு நாடாளுமன்ற ஊடகப் பிரிவால் வெளி யிடப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின்படி மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதி பதியின் அதிகாரங்களை மீள வழங்கும்

2

## சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளோரை பொலிஸ், ராணுவம் கண்காணிக்கும்

கொழும்பு, ஒக் 29

கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணியால் புதிய சுய தனிமைப்படுத்தல் கண் காணிப்பு செயல்முறை அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

அதன்படி, கொவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்ட நபரின் முதல் தொடர்பாளர்களை தங்கள் சொந்த வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் வைத்துக் கண் காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கொவிட் - 19 நோயாளியுடன் முதல் தொடர்பு வைத்திருக்கும் நபர் அடையாளம் காணப் பட்டால், அவர் வீட்டிலேயே சுய தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்படுவார். அவர்களின் தனி மைப்படுத்தல் உரியவாறு கண்காணிக்கப்படும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. சுயதனிமைப்படுத்தப் பட்டவர்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபடும் துறையினரின் நேர அட்டவணை வருமாறு:-

2

## கம்பஹா மாவட் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்துக்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செப்ரெம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரச தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க தீர்மானித்திருந்த அந்த மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர்.

ஒக்ரோபர் 20ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட இந்த மனு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் செல்லும்போது, துமிந்த சில்வாவின் விடுதலையானது உறுதிப்படுத்தப்படும் என்றும் ஆங்கில ஊடகம் கடந்த வாரம் அறிக்கையிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றினை வெளியிட்ட மனோ கணேசன் துமிந்த சில்வாவை போன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கையில் பெரும்பாலான காலத்தை சிறையில் செலவிட்டுள்ளதாக கூறினார்.

ஆகவே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு அவர்களின் குடும்பங்களுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## பி.சி.ஆர் பரிசோதனை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை தொலைக்காட்சி ஒன்றில் நடந்த செவ்வியில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இயந்திரங்களைச் சீர்செய்ய தொழில்நுட்பவியலாளர்கள் பெரும் முயற்சி செய்தார்கள், ஆனால் அது வெற்றிபெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

20 நாள்களுக்கு 24 மணி நேரமும் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுவதால் அவை செயலற்றதாக இருந்திருக்கலாம் என்று ராணுவ தளபதி கூறினார்.

பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்களைச் சீர்செய்ய சீனாவிலிருந்து தொழில்நுட்பவியலாளர் ஒருவரை அழைத்து வர வேண்டும். தற்போது இராஜதந்திர மட்டத்தில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அவர் நாளை இலங்கைக்கு வருகை தருவார்.

சீன தொழில்நுட்பவியலாளர் தனிமைப்படுத்தலின் கீழ் பிசிஆர் இயந்திரங்களை சீரமைக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

## மினுவாங்கொட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எவ்வாறு கொரோனா தொற்று பரவ ஆரம்பித்தது என்பது தொடர்பாக விசாரணை நடத்துமாறு, சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தி இருந்தார்.

இதன் அடிப்படையில், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## 20 ஆவது திருத்தச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வகையில் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு கடந்த 22ஆம் திகதி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றால் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுயதனிமைப்படுத்தப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணி வரை - சம்பந்தப்பட்ட பகுதியின் பொது சுகாதாரப் பரிசோதகர் கண்காணிப்பில் ஈடுபடுவார்.

முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை - அந்தப் பகுதிக்குரிய பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

மாலை 4 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை - உறவினரின் இல்லத்தின் எல்லைக்குள் உள்ள முப்படையினரின் முகாமின் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இந்த சுய தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை யாரேனும் மீறினால், அப்பகுதியின் சுகாதார அதுத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் அவற்றை தனிமைப்படுத்தப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணி குறிப்பிட்டுள்ளது.

## ஒத்திவைக்கப்படாது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் தற்போதைய நிலைமைக் கருத்தில்கொண்டு நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவது தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றக் குழுவின் விசேட கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் கட்சி தலைவர்கள் இதில் பங்கேற்றனர். இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## மாநகர சபையின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய தினம் சந்தித்து தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடினார்.

உள்ளூராட்சி சபைகளில் 2021ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் இடம்பெறவுள்ள நிலையில் அதனை வெற்றி கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பில் கலந்துரையாடி நிலைமைகள் தொடர்பில் முதல்வரிடம் அவர் கேட்டு அறிந்து கொண்டார். கூட்டமைப்பு உறுப்பினர்கள் 16 பேரும் கூட்டமைப்பாக - ஒன்றாக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர் ஏனைய விடயங்கள் தொடர்பில் முதல்வர் மற்றும் கட்சித் தலைமையுடன் உரையாடி தீர்வு காணலாம் எனத் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் என்பது இந்தச் சபை கூடிய பின்னர் 3 ஆவது வரவு - செலவுத் திட்டம் என்பதனால். ஆட்சி விடயத்தில் முக்கியமானது. இதன் காரணமாகவே அனைவரின் கரிசனையும் வரவு - செலவுத் திட்டத்தின்பால் திரும்புகின்றது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேநேரம் சபையின் தற்போதைய நிலைமை, வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பின் முன்னெடுப்பு போன்ற பல விடயங்கள் தொடர்பிலும் மாநகர சபையால் முன்னெடுக்க எண்ணும் திட்டங்களுக்கு நிதியைப் பெறுவதில் உள்ள இடையூறுகள் தொடர்பிலும் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினார்.

## 3 கொரோனா ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்வது தொடர்பான தகவல்கள் எதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

மருதங்கேணி கொரோனா சிகிச்சை வைத்தியசாலை உட்பட்ட அனைத்து கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளும் நோயாளர்களால் நிறைந்துள்ளன என்று தெரியவந்துள்ள நிலையில் நோயாளர்களை எங்கு பராமரிப்பது என்ற சிக்கல் காரணமாக அவர்களை வீடுகளிலிருந்து ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அறியமுடிந்தது.

வடமராட்சியில் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த இருவரும், கரவெட்டி சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தமை தெரிந்ததே.

சில நாட்களுக்கு முன்னர் பருத்தித்துறை மற்றும் குருநகர் பகுதிகளில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர சபை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான வி.மணிவண்ணன் மீது மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் வதியும் ஒருவர் தொடர்ந்த வழக்கின் காரணமாக 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மேன் முறையீட்டு நீதிமன்றம் சபை நடவடிக்கைகளில் அவர் பங்கு கொள்ள இடைக்காலத் தடை பிறப்பித்திருந்தது.

அந்த வழக்கை கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி வழக்காளர் வாபஸ் வாங்கியதன் காரணமாக அத்தடை உத்தரவும் செயலிழக்க மணிவண்ணன் மீண்டும் சபை நடவடிக்கையில் பங்குகொள்ளும் தகுதியைப் பெற்றிருந்தார்.

இதேநேரம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு வாபஸ் பெறப்பட்டமை பற்றிய அறிவுறுத்தல் பிரதி தற்போதைய கொரோனா சூழலில் இன்னமும் யாழ். மாநகர சபைக்கு உத்தியோகபூர்வமாக வந்து சேரவில்லை எனக் கூறப்படுகின்றது.

உத்தியோகபூர்வப் பதிவுப் பிரதியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, குறித்த வழக்கு கைவாங்கப்பட்டு விட்டது என சட்டத்தரணி உறுதிப்படுத்திய கடிதம் ஒன்றை முதல்வரிடம் சமர்ப்பித்து நேற்றைய சபை அமர்வில் மணிவண்ணன் பங்கு கொண்டார்.

மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு முடிவுறுத்தப்பட்ட அறிவித்தல் நீதிமன்றில் இருந்து சபைக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைத்ததா என்ற வினாவை அவரது கட்சியைச் சேர்ந்த வை.கிருபாகரன் ஆட்சேபமாக எழுப்பினார்.

அதற்கு, எந்த அறிவித்தலும் இன்னும் கிடைக்கவில்லை என மாநகர சபையின் செயலாளர் பதிலளித்த சமயம், சட்டத்தரணியால் வழங்கப்பட்ட விளக்கக் கடிதத்தை மாநகர முதல்வர் இ. ஆனல்ட் சபையில் வாசித்து அதை ஏற்பதாக அறிவித்தார்.

தொடர்ந்து சபை அமர்வு இடம்பெற்ற போது யாழ். பஸ்தரிப்பு நிலையக் கடைகளின் பிரச்சினைகள் தொடர்பான விடயத்தினை தனியாக ஆராய சகல கட்சிகள் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அப்போது முன்னணி சார்பில் மணிவண்ணன் பெயரை பார்த்தீபன் பிரேரித்து அவர் பெயர் பதியப்பட்டபோது, முன்னணியின் மற்றுமோர் உறுப்பினரான ஜெயசீலனின் பெயரை கிருபாகரன் பிரேரித்தார்.

இதன்போது ஒரு கட்சியில் இருந்து எத்தனை பேரை நியமிப்பது என்று கேள்வி எழுப்பப்பட்டு, ஒருவருக்குத்தான் இடம் என்று குறிப்பிட்டு அந்த விடயமும் முடிவுறுத்தப்பட்டது.

## பலாலி வடக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று திரும்பியவர்களில் மூவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அவர்களில் பொலிகண்டியைச் சேர்ந்த நபர், பலாலி வடக்கு , ஜே/254 அன்ரனி புரத்தில் கடந்த மாதம் நடைபெற்றிருந்த சாவு வீடு ஒன்றில் கலந்து கொண்டிருந்தார் என்றும், அதன் பின்னர் மீண்டும் கடந்த 24ஆம் திகதி அங்கு நடைபெற்ற அந்தியேட்டி நிகழ்வில் பங்கேற்று விட்டு 26ஆம் திகதியே பொலிகண்டிக்குத் திரும்பினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் சென்று வந்த அந்தியேட்டி நிகழ்வில் பங்குகொண்ட நபர்கள் மற்றும் அவர் தங்கியிருந்த வீட்டாரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல பொலிகண்டியிலும் அவருடைய வீட்டுச் சூழலில் உள்ள நான்கு வீடுகள் வரையில் தனிமைப்படுத்தப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

## கொரோனாத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த முடக்கல் இன்று மாலை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இராஜகிராமத்துக்குள் வெளியாள்கள் நுழையவோ அல்லது குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## 4,142 பேர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் 5 ஆயிரத்து 44 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் இற்றைவரை கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 205 ஆக அதிகரித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பொறுப்புக் கூறல் எனும் ஆயுதம்

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் இலங்கைக்கான தமது விஜயத்தை முடித்து ஒன்றரை நாள் கடந்து விட்டது. ஆயினும், அந்த விஜயத்தின் பெறுபேறுகள் குறித்தே கொழும்பு அரசியலில் தொடர்ந்தும் பிரதானமாய் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மூடிய அறைக்குள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் (அமைச்சர்) மைக் பொம்பியோவும் பேசியவை என்ன என்பதுதான் இப்போது ஆராயப்படும் விடயம். சுமார் நாற்பது நிமிடம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது கொழும்புக்கான அமெரிக்கத் தூதரும் உடனிருந்திருக்கின்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தவை என்று குறிப்பிட்டு ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கைக்கு மேலதிகமாக உள்வீட்டுத் தகவல் ஏதும் தெளிவாகக் கசியவில்லை.

ஆனாலும், திருக்குறளுக்கு திருவள்ளுவருக்குப் பிறகு வந்த பலர் பொருள் உரைத்த மாதிரி, இந்தச் சந்திப்பின் பின் பெறுபேறுகள், விவகாரங்கள் குறித்து பலரும் பல விதமான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் சீன முதலீடுகள், செல்வாக்குகள் அதிகரித்து வருகின்றமை, பொருளாதார நெருக்கடிக்கான நிதி உதவிகள் என்ற பெயரில் சீனா வழங்கும் சகாய வலைக்குள் வீழ்ந்து இலங்கை எதிர்காலத்தில் வேறு வழியின்றி சீனாவின் அடிமை நாடாக மாற வேண்டிய ஆபத்து நேரலாம் என்று எச்சரிக்கப்படுகின்றமை குறித்தெல்லாம் இந்த மூடிய அறைக்குள்ளான சந்திப்பில் பேசப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இலங்கையில் சீன ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்துக் கவலை கொள்ளும் – சிரத்தை காட்டும் – முதல் முக்கிய நாடு அமெரிக்கா அல்ல. இந்தப் பிராந்தியத்தின் பிரதான வல்லாதிக்க சக்தியும், இலங்கையின் உடனடி அயல்தேசமுமான இந்தியாதான் அது. இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது தனது பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதை இந்தியா நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. அந்த இந்தியத் தரப்புடன் புதுடில்லியில் விரிவான பேச்சுக்களை நடத்தி விட்டுத்தான் மைக் பொம்பியோ கொழும்பு வந்திருக்கின்றார். அதுவும் புதுடில்லியில் இந்திய வெளி விவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகிய இருவருடனும் சேர்ந்து மூன்று முக்கியஸ்தர்கள் சந்திப்பாக உயர் மட்டக் கூட்டத்தை நடத்தியமை மட்டுமல்லாமல், பாதுகாப்பு உட்பட சில விடயங்களில் முக்கிய ஒப்பந்தங்களையும் புதுடில்லியுடன் செய்து விட்டுத்தான் கொழும்பு வந்தார் மைக் பொம்பியோ.

அது மட்டுமல்ல, கொழும்பில் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளித்த சமயம், இலங்கை, அமெரிக்காவுடன் மாத்திரம் அல்ல, இந்தப் பிராந்தியத்தின் பெருமைமிகு ஜனநாயகத்தைப் பேணிக் காக்கும் நாடுகளான இந்தியா, ஜப்பான், தென் கொரியா போன்றவற்றுடனும் நெருங்கி, ஊடாடி, இராஜதந்திர இறுக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தக் கருத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று – இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் அணி சேர்ந்துள்ள தரப்புகளே ஜனநாயக நாடுகள். அவற்றுடன் ஊடாடுங்கள்.

அடுத்தது – சீனாவுக்கும் ஜனநாயகத்துக்கு வெகுதூரம். ஆகையினால் அந்த நாட்டுடன் சகவாசம் வைத்துக் கொள்ளாதீர்கள்.

இந்த இரண்டு விடயங்களும் பொம்பியோவின் கூற்றுக்குள் பொதிந்து கிடப்பதை நாம் காணமுடியும்.

அது மாத்திரமல்லாமல், இன்னொரு விடயத்தையும் ஊடகங்களுடனான சந்திப்பிலும், தனித்து ஒரு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலும் கொழும்பில் வைத்து மைக் பொம்பியோ குறிப்பிட்டிருக்கின்றார்.

அது, பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை விலக முடியாது என்பதாகும். பொறுப்புக் கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகளைப் பேணுதல் போன்றவற்றில் தனது கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்ய வேண்டும் என்று கொழும்பு மண்ணில் வைத்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அறிவித்திருப்பது ராஜபக்ஷ அரசின் காதுகளில் நாரசமாய் வீழ்ந்திருக்கும்.

ஆனால், அந்த விடயம்தான் அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் முத்தாய்ப்பாக இருந்திருக்கும் எனக் கருத முடியும்.

இலங்கை – சீனா நெருக்கமான உறவு, அமெரிக்க மற்றும் இந்தியா போன்ற தரப்புகளுக்கு எரிச்சலைத் தருவதாக இருந்தாலும் –

அது விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டையும் எச்சரிக்கைகளையும் கொழும்பு உதாசீனம் செய்து தொடர்ந்து சீன உறவில் விடாப்பிடியாக இருக்குமாயின் –

கொழும்பைக் கையாள்வதற்கு அமெரிக்கா தலைமையிலான நேச சக்திகள் கையில் எடுக்கக் கூடிய வசதியான – தோதான – சர்வதேச உறவாடலுடன் தொடர்புடைய – இலகுவான ஆயுதம் இந்தப் பொறுப்புக் கூறல் விவகாரம்தான்.

யானை பலமானதுதான். ஆனால் அங்குசம் அந்தப் பெரிய யானையைக் கட்டுப்படுத்தி வைப்பதற்குப் போதுமானது. அது போலவே சீன உறவில் தீவிர ஈடுபாடு காட்டி, மிதப்புடன் கொழும்பு நடந்து கொள்ளுமானால் அமெரிக்கா போன்ற நாடுகள் பொறுப்புக் கூறல் என்ற அங்குசத்தை வைத்தே கொழும்பை வழிக்குக் கொண்டு வந்து விடும் என்பது திண்ணம்.

## கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அனுராதா மட்டக்களப்பு அரச அதிபரை சந்தித்தார்!

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (புதன்கிழமை) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக கே. கருணாகரன் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஆளுநருடனான உத்தியோகபூர்வ முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இதன்போது ஆளுநர் மக்கள் இடங்களுக்குச் சென்று மக்கள் சந்திப்பை மேற்கொள்கின்றமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் ஆளுநரின் மக்கள் சந்திப்புக் காரியலயமும் பார்வையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச ரீதியில் இலங்கை முன்னேற்றம் கொரோனாவில் 112 ஆவதாக முன்நகர்வு!

உலகை அச்சுறுத்தும் கொடிய கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 112 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளவில் மக்களை அச்சுறுத்திவரும் நிலையில், இலங்கையிலும் அதன் பாதிப்பு தற்போதைய காலங்களில் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணி காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணியில் மாத்திரம் பதிவாகியுள்ள மொத்த வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒன்பதாயிரத்து 205 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இந்த வைரஸ் காரணமாக நாட்டில் 19 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறான நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த மாதமளவில் சுமாராக 30 ஆவது இடத்தில் இருந்த இலங்கை கடந்த சில தினங்களில் சடுதியாக முன்னேறி 112ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையில் கொரோனா பரவல் ஆரம்பமாகிய காலப்பகுதியில் கடந்த ஜுன் மாதமளவில் இலங்கை 100ஆவது இடத்தில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா வைரஸைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை அரச திணைக்களங்கள் தடையின்றி முன்னெடுக்குக!

### உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் அறிக்கை

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை ஏனைய அரச சேவைகளும் தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை, மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கொவிட் – 19 வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வேலைத்திட்டம் மற்றும் அதற்கமைவாக ஏனைய அரச சேவைகளையும் தடையின்றி நடத்தி செல்லும் தேவை ஏற்பட்டுள்ளது.

தற்போது உள்ள நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆக கூடிய வகையில் நிறைவேற்றுவதில் அரச அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் வலியுறுத்துகின்றேன்.

கொவிட் – 19 வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் பிரதானிகளால் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகளை உள்ளடக்கி ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2020 ஏப்ரல் 18 ஆம் திகதி மற்றும் 2020 மே மாதம் 14 ஆம் திகதிய சுற்றறிக்கைகளில் கவனம் செலுத்தி அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய ஊழியர்களை சேவைக்கு அழைத்தல் மற்றும் நிறுவனங்களை நடத்தி செல்வதுடன் அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டபடி அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்புக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக செயல்பட வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத வழிபாடுகளுக்கு 50 இற்கு குறைந்தவர்களுக்கே அனுமதி!

மத வழிபாடுகளுக்காக மக்களை ஒன்றிணைக்கும் போது 50 பேருக்கு குறைந்த நபர்களை ஒன்றிணைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக எதிர்வரும் போயா தினத்தில் அதிகளவான கவனம் செலுத்துமாறு இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வழமை போன்று மத வழிபாடுகளை முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 3 மாதக் குழந்தை மற்றும் தாய்க்கு மத்துகமவில் கொரோனாத் தொற்று!

*மதுகம - வலல்லாவிட பகுதியில் 3 மாதக் கைக்குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*அத்துடன் அந்தக் குழந்தையின் தாய்க்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளமையோடு, அவர்கள் இருவரும் தற்போது ஐ.டி.எச் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*இந்த நிலையில் அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காதலிக்க மறுத்த மாணவியை வீதியில் சுட்டுக்கொன்ற காதலன்!



ஹரியானாவில் இரண்டு இளைஞர்கள் பட்டப்பகலில் இளம்பெண் ஒருவரை சுட்டுகொன்ற வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிகிதா தோமர் என்ற பெண் பரீட்சைக்குச் சென்றிருந்தார். அவர் இறுதி ஆண்டு வர்த்தக மாணவி.

ஹரியானா மாநிலம், பரிதாபாத்தில் உள்ள பல்லப்கரில் உள்ள ஒரு கல்லூரிக்கு வெளியே இந்தச் சம்பவம் நடந்தது.

அது பற்றி மேலும் தெரியவருவதாவது –

நேற்று மதியம் 3.40 மணியளவில் கல்லூரிக்கு தேர்வு எழுதுவதற்காக வந்த பெண்ணை கல்லூரி வளாகத்திற்கு வெளியே இரண்டு நபர்கள் காத்திருந்து சுட்டுக்கொன்ற சம்பவம் அங்குள்ள கண்காணிப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

அதில் காரில் வந்த இரண்டு இளைஞர்கள் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருக்கும் பெண்களை வழிமறித்து அவர்களில் ஒரு பெண்ணை காரில் ஏற்ற முயற்சி செய்கின்றனர். சிறிது நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர் அந்த இளைஞர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அந்த பெண்ணை நோக்கி சுட்டுவிட்டு, பின்னர் காரில் ஏறி தப்பிச் செல்கிறார். இந்த சம்பவம் முழுவதும் கமராவில் பதிவாகியுள்ளது.

துப்பாகியால் சுடப்பட்ட அந்த பெண் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆனால் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கத் தொடங்கினர்.

இதனை தொடர்ந்து உயிரிழந்த அந்த பெண்ணின் பெயர் நிகிதா தோமர்(வயது – 21) என்பதும், கல்லூரியில் இறுதி ஆண்டு தேர்வு எழுத வந்த அவர் கல்லூரி வளாகத்திற்கு வெளியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக தௌஃபீக் மற்றும் ரீஹான் ஆகிய இருவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தௌஃபீக் மற்றும் நிகிதா ஒருவருக்கொருவர் தெரிந்திருந்தனர். 2018 ஆம் ஆண்டிலும் நிகிதாவை அவர் கடத்திச் சென்றார் என ஃபரிதாபாத் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிஅதிகாரிஓ.பி.சிங்தெரிவித்தார்.

நிகிதாவின் பெண்ணின் தந்தை 2018 இல் தௌஃபீக் மீது முறைப்பாடு அளித்த போதிலும் பின்னர் அதை வாபஸ் பெற்றார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரான்ஸ் ஆசிரியர் கொலை இந்தியா கடும் கண்டனம்!



பிரான்சில் ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியுறவுத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அவரது குடும்பத்தினருக்கும் பிரான்ஸ் மக்களுக்கும் எங்களது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். எந்த வொரு காரணத்துக்காகவும் அல்லது எந்த சூழ்நிலையிலும் பயங்கரவாத செயலை நியாயப்படுத்த முடியாது.– எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகம் தொடர்பான கேலிச் சித்திரங்களை மாணவர்களிடத்தில் காட்டி 'பேச்சு, கருத்து சுதந்திரம்' பற்றி வகுப்பறையில் விவாதம் நடத்திய பிரான்ஸின் வரலாற்று ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்கு வெளியே கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பிரான்ஸில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் பொலிஸாரால் கொலை செய்யப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் துரைகண்ணனின் உடல்நிலை கவலைக்கிடம்!



தமிழக வேளாண்துறை அமைச்சர் துரைக்கண்ணுவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள அவருக்கு நுரையீரலில் தொற்று அதிகரித்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் விழுப்புரத்திலுள்ள அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக ஆழ்வார் பேட்டையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அமைச்சர் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

இந்நிலையில், நுரையிரலில் தொற்று தொடர்ந்து அதிகரித்து வருவதால் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவருக்கு செயற்கை சுவாசக்கருவி பொருத்தப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மாணவியைக் கடத்திச் சென்று மகனுக்கு திருமணம் செய்துவைத்த பெற்றோர் கைது!

பள்ளி மாணவியைக் கடத்திச் சென்று மகனுக்கு திருமணம் செய்து வைத்த தாய் – தந்தையை பொலிஸார் கைது செய்தனர்.

திருக்கோவிலூரை அடுத்த அம்மன் கொல்லைமேடு கிராமத்தைச் சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் பிரபாகரன் (வயது – 27). கரும்பு வெட்டும் தொழிலாளி. சம்பவத்தன்று இவர் தனது தந்தை ஆறுமுகம், தாய் முனியம்மாள் மற்றும் அண்ணன் ரவி ஆகியோரின் உதவியுடன் அதே பகுதியைச் சேர்ந்த 11 ஆம் வகுப்பு மாணவியை கடத்தி சென்று விட்டார்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் திருக்கோவிலூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்தனர். அதன் பேரில் சப் – இன்ஸ்பெக்டர் சிவசந்திரன் இது தொடர்பாக விசாரணை நடத்துவதற் காக பிரபாகரன் வீட்டுக்கு சென்றார். ஆனால் வீட்டில் யாரும் இல்லை எனத் தெரிகிறது. இதையடுத்து பிரபா கரன், ஆறுமுகம், முனியம்மாள், ரவி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை வலைவீசி தேடி கைது செய்துள்ளார்.

# மொத்தத் தொற்றாளர் 80 லட்சம் கடந்தது!

*இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக இறங்கு முகத்தில் செல்கிறது. இருப்பினும் மொத்த பாதிப்பாளர்களின் எண்ணிக்கை 80 லட்சத்தைக் கடந்துள்ளது.*

*அந்தவகையில் நேற்று (புதன்கிழமை) 49 ஆயிரத்து 912 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 80 லட்சத்து 38 ஆயிரத்து 765 ஆக அதிகரித்துள்ளது.*

*அத்துடன் 509 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 20 ஆயிரத்தை கடந்துள்ளது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 73 லட்சத்து 14 ஆயிரத்தை கடந்துள்ளதுடன் 6 லட்சத்து 3 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.*

*இவர்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# காற்று மாசைக் கட்டுப்படுத்த டெல்லியில் அவசர சட்டம்

டெல்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான தண்டனையுடன் கூடிய அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டெல்லியில் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், காற்று மாசை கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசு அவசர சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த சட்டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளமையை அடுத்து உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

இதன்படி அரசின் உத்தரவை மீறி யாராவது காற்று மாசு ஏற்படுத்தினால் இந்த சட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபா வரை அபராதம் மற்றும் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காற்று மாசை தடுப்பதற்காக தனியாக ஒரு வாரியம் அமைக்கவும் அவசர சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் அரசுத் துறைகள் மற்றும் மாநில அரசு பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

வட மாநிலங்களில் அறுவடை முடிந்த பிறகு காய்ந்த வைக்கோல்களை விவசாயிகள் எரிப்பதால் காற்று மாசடைந்து டெல்லி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் புகை மண்டலம் உருவாகி உள்ளமையுடன், காற்று தரக் குறியீடு அபாய அளவை தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஹார்ப்பூன் ரக ஏவுகணைகள் தாய்வானுக்கு ஏற்றுமதி ஆகும்!



## அமெரிக்கா அறிவிப்பு

சீனாவுடனான பதற்றத்துக்கு மத்தியில் தாய்வானுக்கு, 2.37 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான இராணுவ ஏவுகணைகளை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தாய்வான் ஜலசந்தி பகுதியின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்யும் வகையில், தாய்வான் நாட்டுக்கு 237 கோடி மதிப்பிலான 'ஹார்ப்பூன்' ரக ஏவுகணைகளை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளோம். எனினும், அந்தப் பிராந்தியத்தின் இராணுவ சமநிலையை மாற்றும் நோக்கம் எங்களுக்கு இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்களான போயிங்கோ, லொக்ஹீட் மார்ட்டின் கார்ப்பரேஷன், ரேதியான் டெக்னாலஜிஸ் கார்ப்பரேஷன் உள்ளிட்ட அமெரிக்க இராணுவ ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்களுடன் தாய்வான் தொழில் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இந்தநிலையில், முன்னதாக இந்த மூன்று ஆயுத தயாரிப்பு நிறுவனங்களுக்கும் சீன அரசாங்கம் பல தொழில் கட்டுப்பாடுகளை விதித்தது. எனினும் இவை அனைத்தையும் பொருட்படுத்தாமல் ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

தாய்லாந்தை தனது பிராந்தியம் என சொந்தம் கொண்டாட முனையும் சீனா, தென்கிழக்கு கடற்கரையில் படை பலத்தை அதிகரித்து வருவதாக, சீன இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணித்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

எந்த நேரத்திலும் சீனா தாய்வான் மீது தாக்குதல் நடத்தலாம் எனக் கூறப்படுகிற நிலையில், இந்த ஆயுத கொள்வனவு இடம்பெறுகின்றது.

அத்துடன், சீனாவின் இந்த நெருக்கடிகளை மீறி தங்கள் ஆயுத பலத்தை அதிகரித்துக் கொள்ள தாய்வான் தலைசிறந்த ஆயுதங்களை அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறது. எதிர்காலத்தில் சீனாவுக்கும் தாய்வானுக்கும் போர் மூண்டால் தங்களைத் தற்காத்துக்கொள்ள இந்த ஆயுதங்களை தாய்வான் பயன்படுத்த உள்ளது.

# பாகிஸ்தானில் இந்து ஆலயம் நிர்மாணிப்பதற்கு அனுமதி!



மத பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் பாகிஸ்தானின் அரசு நடத்தும் உயர்மட்ட இஸ்லாமிய அமைப்பு, பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மை இந்துக்களுக்காக ஒரு புதிய ஆலயத்தை நிர்மாணிக்க புதன்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள ஒரு முக்கிய இந்துத் தலைவரான லால் மல்ஹி இந்த தீர்ப்பைப் பாராட்டியுள்ளார். எனினும் தனியார் வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதில் பொது நிதியை நேரடியாக செலவிட வேண்டாம் என்று சபை அறிவுறுத்தியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் அரசாங்கம் ஜூன் மாதம் தலைநகர் இஸ்லாமாபாத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்து ஆலய கட்டுமானத்தை திடீரென நிறுத்தியது.

ஆலய நிர்மாணிப்பது ஓர் அவதூறான செயல் என்று கூறி முஸ்லிம்கள் மத்தியில் எழுந்த கடும் அச்சுறுத்தல் மற்றும் பதற்ற நிலைகளை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந் நிலையிலேயே இந்து ஆலயத்தை நிர்மாணிப்பதற்கு மதகுருமார்கள் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை சிறுபான்மையினருக்கு சம உரிமை வழங்குவதாக உறுதியளித்த இம்ரான் கான், ஆலய கட்டுமானத்தை அனுமதிக்க முறையான உத்தரவைப் பிறப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, இஸ்லாமாபாத்தில் இந்துக்களுக்காக செயற்படும் ஆலயங்களில் இல்லை. தலைநகரில் ஒரு பழங்கால ஆலயம் உள்ளது, எனினும் தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக அதை யாரும் பயன்படுத்துவதில்லை.

சுமார் ஒரு மில்லியன் மக்கள் வசிக்கும் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் மூவாயிரம் இந்துக்கள் வாழுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வியட்நாமில் நிலச்சரிவு புயலால் 13 பேர் சாவு!

## 40 பேரைக் காணவில்லை

வியட்நாமில் மத்திய மாகாணமான குவாங்நாமில் தொலைதூரப் பகுதிகளைத் தாக்கிய நிலச்சரிவுகள், புயலால் இதுவரை 13 பேர் உயிரிழந்தமையோடு, 40 பேரைக் காணவில்லை.

அத்துடன் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் 90 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

மலைப்பகுதியில் உள்ள டிரா வான் மற்றும் டிராங் லெங் ஆகிய கிராமங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி ஏராளமான வீடுகள் புதைந்தன.

ஒக்ரோபர் தொடக்கத்தில் இருந்து, வியட்நாம் புயல்கள், பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இது இதுவரை ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதித்துள்ளது.



# பிரித்தானியாவில் படகு கவிழ்ந்து விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் சாவு!

பிரித்தானியாவில் சட்ட விரோதமாக குடியேற முயன்ற குடியேற்றவாசிகள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த அறுவர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானை சேர்ந்த 35 வயதான கணவன், 35 வயதுடைய மனைவி மற்றும் அவர்களின் ஒன்பது, ஆறு மற்றும் ஒரு வயது குழந்தைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ஒகஸ்ட் மாதத்தின் ஆரம்பத்தில் சிறந்த எதிர்காலத்தை அடையும் நோக்கில், பிரித்தானியா நோக்கி அந்தக் குடும்பம் ஆள்கடத்தல் காரர்களின் உதவியுடன் படகில் பயணித்துள்ளது.

ஈரானில் இருந்து படகின் மூலம் துருக்கியை அடைந்து அங்கிருந்து இத்தாலிக்கு பயணித்து மீண்டும் பிரான்ஸ் ஊடாக பிரித்தானியாவை அடைய முயன்றுள்ளனர்.

பிரான்ஸிலிருந்து படகில் பயணித்து கடலைக் கடக்க முயன்ற போது 57 மைல் வேகத்தில் கற்று விசியமையை யடுத்து எழுந்த ஐந்து அடி அலைகளால் தாக்கப்பட்டு அவர்கள் பயணித்த தற்காலிக மீன்பிடி படகு கவிழ்ந்துள்ளது.

இதனையடுத்து படகில் பயணித்த ஐவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமையுடன், ஒருவயது குழந்தை காணாமல் போயுள்ளது.

இவர்கள், பிரித்தானியாவை நெருங்கியவுடன் சேனலைக் கடக்க முன்னர் கடத்தல்காரர்களுக்கு செலுத்த வேண்டிய 6 லட்சத்து 21 ஆயிரத்து 600 பவுண்டு பணத்தையும் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் துரதிஷ்டவசமான பயணத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் பிரான்ஸில் எடுத்து கொண்ட இறுதியான படங்கள் தற்போது சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டுள்ளன.

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு 17 ஆண்டு கடூழிய சிறை தண்டனை!



தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி லீ மியுங் - பாக் கிற்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக முன்னர் பிறப்பிக்கப்பட்ட 17 ஆண்டு கால சிறைத் தண்டனையை தென் கொரியாவின் உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

சம்சுங் உள்ளிட்ட தென் கொரியாவின் பெரிய நிறுவனங்களிடமிருந்து மில்லியன் கணக்கான டொலர்களை இலஞ்சமாக பெற்றமை, தனக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்தின் பெருநிறுவன நிதியை மோசடி செய்தல் மற்றும் தென் கொரியாவின் உளவு அமைப்பின் உத்தியோகபூர்வ நிதியை தவறாக பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு லீ மியுங் - பாக் கிற்கு இந்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லீ மியுங் - பாக் 2008 - 2013 வரையான காலப் பகுதியில் ஜனாதிபதியாக இருக்கும் முன்னரும், பின்னரும் இந்தக் குற்றங்கள் நிகழ்ந்தன எனக் கூறப்படுகிறது.

லீக்கு ஆரம்பத்தில் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பல மாதங்கள் கழித்து அவர் சிறையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் இந்த ஆண்டு பெப்ரவரியில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்ட நிலையில் தென் கொரியாவின் உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை அவருக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

இந் நிலையில் லீ யின் பிணை இரத்து தொடர்பான உத்தரவு தொடர்பில் முறையிட ஆறு நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆறு நாள்களின் பின்னர் அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவார்.

78 வயதான லீ, வணிக பின்னணியுடன் தென் கொரியாவின் முதல் ஜனாதிபதியாக இருந்தார், ஒரு காலத்தில் நாட்டின் பொருளாதார உயர்வை அடையாளப்படுத்தினார். அவர் 1960 களின் நடுப்பகுதியில் ஹூண்டாய் குழுமத்தின் கட்டுமானப் பிரிவில் நுழைவு நிலை வேலையுடன் தனது வணிக வாழ்க்கையைத் தொடங்கினார்.

அவர் ஹூண்டாய் குழுமத்தின் கீழ் 10 நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியாக உயர்ந்ததற்கு முன்பு, தென் கொரியாவின் பொருளாதாரம் வெடிக்கும் வகையில் வளர்ந்த நேரத்தில் குழுவின் விரைவான உயர்வுக்கு வழிவகுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசியத் சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது

நாட்டின் தற்போதைய நிலையில் அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் உள்ளவர்களுக்காக இரண்டு வாரங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை வழங்குவதற்கான விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வாரம் முழுவதிலும் முழுமையாக முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரம், நீர், எரிபொருள், எரிவாயு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான திட்டமொன்றும் வகுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டை முடக்காமல் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள்

## அரச மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

நாட்டை முழுமையாக முடக்கும் அளவிற்கு கொரோனா தொற்றின் தாக்கம் நாட்டில் ஏற்படாத விதத்தில் சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அநுருத்த பாதெனிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

வயோதிபர்கள் மற்றும் தொற்றுநோய் ஆகியவற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எமது நாட்டில் கொரோனா தொற்றால் ஏற்படும் உயிரிழப்பு நூற்றுக்கு 0.2 வீதத்தில் காணப்படுகின்றது. ஆனால் உலகநாடுகளில் 2 அல்லது 3 என்றரீதியில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் நாட்டில் தொடர்ந்தும் கொரோனா தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக 9 வழிமுறைகளை அறிவித்துள்ளோம். இதிலே பிரதானமாக விநியோக நடவடிக்கைகள் ஊடாக தொற்று பரவுவதை தடுத்தல். மீன் விற்பனை மற்றும் ஆடை தொழிற்சாலை ஆகியவற்றில் ஏற்பட்ட தொற்றுபரவல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது.

இதற்கு அந்தத் தொழிற்தளங்களில் முறையாக சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமையே காரணமாக அமைந்துள்ளது.

ஆகவே இதுபோன்ற விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது. இந்த நிலையில் 490 பொலிஸ் பிரிவுகளில் 200 இற்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு ஊரடங்கு அறிவிக்கப்பட்டால் நாட்டை முழுமையாக முடக்க வேண்டி ஏற்படும்.

ஆகவே அந்த நிலை ஏற்படாத விதத்தில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி செல்லவே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# லிந்துலை நகரசபைத் தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்தம்

லிந்துலை நகரசபை தலைவர் பதவியிலிருந்து அசோக சேபால இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர், சட்டத்தரணி லலித் யூ. கமகேவினால் இதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய உடன் அமுலாகும் வகையில் நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து அசோக சேபால இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், தலைவர் பதவிக்கான அதிகாரங்களை செயற்படுத்துவதற்கான அனுமதி நகர சபையின் பிரதி தலைவர் லெட்சுமன் பாரதி தாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# யாழில் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணத்தில் மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குமே இவ்வாறு கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேற்படி மூவரும் பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்து தனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விடத்தல்பளையில் தனிமைப்படுத்தலில் இருக்கின்ற தென்பகுதியைச் சேர்ந்த 37 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 243 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், ஏனையவர்களுக்கு தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# மேல்மாகாண ஊரடங்கு உத்தரவு உயர்தர பரீட்சைக்கு தடையாகாது!

மேல் மாகாணத்தில் இன்று நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்படவுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தால் கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மேல் மாகாணம் முழுவதும் இன்று நள்ளிரவு தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பொது போக்குவரத்து சேவைகள் பாதுகாப்பான முறையில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயர்தர பரீட்சை நிறைவு பெறும் வரையில் இந்தச் சேவையை தொடர்ந்து சிறப்பான முறையில் முன்னெடுக்குமாறு ரயில் திணைக்களம் மற்றும் அரச போக்குவரத்துச் சேவைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொதுப் போக்குவரத்துச் சேவையை வழமை போன்று முன்னெடுப்பதாக அரச பொதுபோக்குவரத்துத் துறையினர் உத்தரவாதம் வழங்கியுள்ளனர். எனவே, மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது. - என்று தெரிவித்தார்.

# ஊரடங்கு காலத்தில் மேல்மாகாணத்துக்குள் உட்செல்லல், வெளிச் செல்லலுக்குத் தடை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில் மேல் மாகாணத்திற்குள் பிரவேசிப்பது அல்லது அங்கிருந்து வெளியேறுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தி மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கவோ அல்லது வெளியேறவோ முடியாது.

இன்று நள்ளிரவு 12 மணிக்கு மேல் மாகாணத்தில் 112 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதேபோன்று குளியாப்பிட்டி பிரதேசத்தில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. ஊரடங்கு சட்டம் திங்கட்கிழமை காலை 5 மணியுடன் நிறைவடைகின்றது.

ஏனைய 68 பொலிஸ் பிரிவுகளில் அதேபோன்று ஊரடங்கு சட்டம் இடம்பெறும். இந்த ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் எந்த வகையிலும் மேல் மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்வதற்கோ மேல் மாகாணத்துக்கு வருவதற்கோ யாருக்கும் வாய்ப்பில்லை.

மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து நுழைவாயில் அமைந்துள்ள இடங்களில் பொலிஸ் வீதி தடைகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வீதி தடைகள் நாளை முதல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படும் மேல் மாகாணத்தில் அதிவேக நெடுஞ்சாலையும் உள்ளடங்குகின்றது. இந்த வீதி ஊடாக மேல் மாகாணத்துக்கு வருவதற்கும் மேல் மாகாணத்தில் இருந்து வெளியே செல்வதற்கும் எந்த வாகனத்துக்கும் அனுமதியில்லை.

விபத்துக்கள் சம்பந்தப்பட்ட வாகனங்கள் மாத்திரம் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். விசேடமாக அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தமது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். இதைத் தவிர வேறு யாருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

முன்னர் திட்டமிடப்பட்டிருந்த திருமண வைபவங்கள் அல்லது வேறு எந்த வைபவங்களையும் ஊரடங்கு சட்ட காலப்பகுதியில் நடத்தப்படுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதிக்குள் பல்வேறு வைபவங்கள் தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. பொதுமக்கள் ஒன்று கூடுதல், மண்டபங்களில் மக்கள் ஒன்று கூடுதல் இந்த காலப்பகுதியில் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வீடுகளில் சுயமாக தனிமைப்படுத்தப்பட்டவர்களில் சிலர் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடிக்காமல் இருக்கின்றமை தொடர்பாகக் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் முறையாக நாட்டில் பரவ ஆரம்பித்தது. அப்போது பொதுமக்கள் மிகவும் அவதானத்துடனும், பொறுப்புடனும் அதனை தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். இதனை மீண்டும் நினைவில் கொண்டு பொதுமக்கள் செயற்படுவது அவசியம்.

வைரஸ் தொற்று தொடர்பில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவசர தேவைகளுக்காக தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் சிலர் இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் நடமாடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2020 இல் வெளியிடப்பெற்றது.